Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, APRIL 20, 2023

வியாழக்கிழமை ஏப்ரல் 20, 2023 | ஒளி: 08 கதிர்: 253 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# சின்னத் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு




எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்த முடியாது என்று அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. தேர்தலுக்குத் தேவையான நிதியை திறைசேரி இன்னும் விடுவிக்காததால் ஏப்ரல் 25 ஆம் திகதியன்று உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்று வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. திறைசேரி நிதி ஒதுக்கியதும் அல்லது உயர்நீதிமன்றம் தேர்தல் குறித்து உத்தரவு பிறப்பித்ததும் தேர்தலுக்கான புதிய திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவத்தாட்சி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 09ஆம் திகதியன்று நடத்த ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி விடுவிக்கப்படாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# பால்மாவின் விலை மேலும் குறையும்

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை மேலும் குறைப்பதற்கு நாட்டிலுள்ள பிரதான பால்மா இறக்குமதி நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. பால் மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடனான கலந்துரையாடலின் போது இதே இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும், எதிர்காலத்தில் நிறுவனங்களே விலையை தீர்மானிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலவத்துகொட பொலிஸ் பிரிவில்

# 72 பள்ளிவாசல்களுக்கு கடும் பாதுகாப்பு

ஷேன் செனவிரத்ன

கண்டி, அலவத்துகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிவாசல்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படுமென, பொலிஸ் அவசர பிரிவுக்குக் கிடைத்த அநாமதேய தகவலை அடுத்து, அப்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டிருக்கும் சகல பள்ளிவாசல்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அநாமதேய அழைப்பு, செவ்வாய்க்கிழமை (18) பிற்பகல் 2.45க்கு 118 என்ற பொலிஸ் அவசர இலக்கத்துக்கே கிடைத்துள்ளது.

இதனையடுத்து மத்திய மாகாண உயர்பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு, அப்பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை எடுத்தனர்.

இதனடிப்படையில் அப்பொலிஸ் பிரிவுக்கு கீழிருக்கும் 72 பள்ளிவாசல்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் குழு மற்றும் இராணுவ குழு கடமைக்கு அழைக்கப்பட்டு, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், அவ்வாறான தகவல்கள் எவையும் தங்களுக்கு கிடைக்கவில்லை என புலனாய்வு தரப்பினர் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

IMF உடன்படிக்கை விவகாரம்

# பாராளுமன்ற அங்கிகாரம் பெற அமைச்சரவை அனுமதி




சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் 3 பில்லியன் அமெரிக்க டொலர் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கு கடந்த மாதம் 22 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# நானு ஓயாவில் பெற்றோல் குண்டுப் பொதி சிக்கியது

ஆ.ரமேஸ். டி.சந்ரு, செ.திவாகரன்

நானு ஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிலாஸோ மேல் பிரிவு தோட்டத்தில் பெற்றோல் குண்டு தயாரிக்க கூடிய உபகரணங்கள் அடங்கிய பொதி ஒன்றை நானு ஓயா பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். நானு ஓயா பொலிஸாக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கிலாஸோ தோட்டத்துக்கு செவ்வாய்க்கிழமை (18) மாலை விரைந்த பொலிஸார் தனி வீடொன்றுக்கு அருகில் இருந்து இப்பொதியை கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2

# கர்தினால் என்ன பிரதம நீதியரசரா?



ஷேன்செனவிரத்ன

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலான சட்டத்தை செயற்படுத்த வேண்டிய அதிகாரம் நீதிமன்றத்துக்கு அல்லது பிரதம நீதியரசருக்கே உள்ளது எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கர்தினால் என்ன பிரதம நீதியரசரா என்றும் கேள்வி யெழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

# குரங்கு வர்த்தகம் குறித்து எமக்கு எதுவும் தெரியாது

## சீன தூதரகம் அறிவிப்பு



அழிந்துவரும் இலங்கையின் டோக் மக்காக் குரங்குகளை சீனாவுக்கு இறக்குமதி செய்யுமாறு தனியார் நிறுவனம் ஒன்று விடுத்த கோரிக்கை தொடர்பில் சீனாவிலுள்ள அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை என்று இலங்கைக்கான சீன தூதரகம் தெரிவித்தது. சீன தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டங்கள் குறித்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் சமீபத்திய தவறான தகவல்களை கவனித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# சமுர்த்தி, பொலிஸை அழைத்தது ‘கோபா’



சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றை அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா குழு) முன்னிலையில் அழைத்திருப்பதாக அக்குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# தேசிய இப்தார் நிகழ்வில்...

புனித ரமழான் நோன்பை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் செவ்வாய்க்கிழமை (18) தேசிய இப்தார் நிகழ்வு நடத்தப்பட்டது.

# தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்க பேசவில்லை

## பொய்யான செய்தி என்கிறார் மனோ

தேசிய அல்லது எந்தவோர் அரசாங்கத்திலும் அங்கம் வகிப்பது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு கூடிப்பேசவும் இல்லை என்றும் எந்தவித முடிவும் எடுக்கவும் இல்லை என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், புதன்கிழமை (19) தெரிவித்தார். தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பிரேரணையை எதிர்வரும் 25ஆம் திகதியன்று

தொடர்ச்சி P2

றிஜடி அழைப்பாணைக்கு எதிராக

# 7 பக்க ஆட்சேபனையை சமர்ப்பித்தார் தப்புல



## சட்டமா அதிபரைச் சாட்சியாக அழைக்க முடியாது என்று அறிவிப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக தன்னை அழைப்பதற்கு எதிராக ஏழு பக்க ஆட்சேபனை கடிதத்தை முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, புதன்கிழமை (19) தனது கனிஷ்ட சட்டத்தரணி ஊடாக சமர்ப்பித்தார். முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா பயங்கரவாத புலனாய்வு பிரிவில் (ரிஜடி) ஆஜராகவில்லை என்பதுடன், அவருடைய கனிஷ்ட சட்டத்தரணி திமித்ர அபேசேகர ஆட்சேபனைக் கடிதத்தை ரிஜடி பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன அல்விஸிடம் கையளித்தார்.

தொடர்ச்சி P2

# 2025க்கு முன் 172 அபிவிருத்தி திட்டங்கள் பூர்த்தியாகும்

නාගරික සංවර්ධන අධිකාරිය
நகர அபிவிருத்தி அதிகாரசபை
Urban Development Authority

2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் 204 உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கிய 172 அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும் என்றும் இந்த வருடத்தில் 21 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளது என்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

குருவிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. மேலும், பெல்மடுல்ல/கஹவத்தை அபிவிருத்தித் திட்டங்கள் அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும், ரம்புக்கன, குளியாபிட்டிய, தலாவ, கெக்கிராவ, வெலிமடை, பண்டாரவளை, வெல்லவாய, நாவலப்பிட்டி, குண்டசாலை, கம்பளை, வவுனியா, கிளிநொச்சி, அம்பலாங்கொட, மாத்தறை, கட்டான-சீதுவ, ஜா எல, வத்தளை-மாபோல, கம்பஹா ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள். இந்த ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படவுள்ளன.

அத்துடன், இவ்வருட இறுதிக்குள் நுவரெலியா மற்றும் அறுகம்பேயின் அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானி மூலம் வெளியிடப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன.

2021-2022 இரண்டு ஆண்டுகளில், நகர அபிவிருத்தி அதிகார சபை வர்த்தமானி மூலம் 32 அபிவிருத்தி திட்டங்களை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சின்னத் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் அந்தத் திகதியில் தேர்தலை நடத்த முடியாது என்றும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நிதி கிடைக்கும் பட்சத்தில் தேர்தல் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் தேசிய தேர்தல் ஆணைக்குழு அண்மையில் தெரிவித்தது.

நிதிப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தேர்தலை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

# பாராளுமன்ற அங்கிகாரம் பெற அமைச்சரவை அனுமதி




48 மாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக் கடன் தொடர்பான ஆவணங்கள் ஏற்கெனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை உறுதி செய்துகொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பிரதான கொள்கைகளை சட்டமாக மாற்றுவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கர்தினால் என்ன பிரதம நீதியரசரா?



தண்டப்பணத்தைதான் செலுத்தவில்லை எனில், அதுதொடர்பிலான நடவடிக்கை எடுப்பதற்கான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்துக்கே உள்ளது. நீதிமன்றத்துக்கு தலை வணங்கி, தண்டப்பணத்தை செலுத்தவேண்டும் என்றார்.

தலதாமாளிகைக்கு புதன்கிழமை (19) சென்று, வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு முன்னர், பயங்கரவாத தடைச்சட்டம் அமலில் இருந்தது. அதனால், 30 வருட பயங்கரவாதத்தை துடைத்தெறிய முடிந்தது என்றார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நல்ல மற்றும் கெட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து, திருத்தங்கள் தேவையாயின் அவற்றை சேர்த்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தச்சட்ட மூலம் தொடர்பில் சரியான விளக்கத்தை தெரிந்து கொள்வதற்காக, கட்சியின் சட்டநிபுணர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இதுதொடர்பில் வழங்கும் பரிந்துரைகளை கட்சிக்குள் கலந்துரையாடி, அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்

# குரங்கு வர்த்தகம் குறித்து எமக்கு எதுவும் தெரியாது

சீனாவில் உள்ள வன விலங்குகள், தாவரங்களின் இறக்குமதி - ஏற்றுமதியை மேற்பார்வை செய்யும் பிரதான அரசாங்கத் திணைக்களமான சீன தேசிய வனவியல் மற்றும் புல்வெளி நிர்வாகத்திடம் இவ்விடயம் தொடர்பில் தாம் வினவிய போதும், அவர்கள் அதனை அறிந்திருக்கவில்லை என்று சீன தூதரகம் தெரிவித்துள்ளது.



அழிந்து வரும் உயிரினங்கள், தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான மாநாட்டின் ஒரு பங்காளியாக தமது நாடு 1988 ஆம் ஆண்டில் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை பல திருத்தங்களுடன் நிறைவேற்றியுள்ளதாக சீன தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வனவிலங்குகளின் பாதுகாப்புக்கு சீன அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னுரிமை வழங்குவதாகவும், அதற்கான சர்வதேச கடமைகளை தீவிரமாக நிறைவேற்றுவதாகவும் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# நானு ஓயாவில் பெற்றோல் குண்டுப் பொதி சிக்கியது

குறித்த பொதியில் பெற்றோல் நிரப்பப்பட்ட போத்தல்கள், வயர்கள், முக்கோண பட்டாசுகள் உட்பட பல பொருட்கள் அடங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிலாஸோ தோட்ட மேல் பிரிவில் தோட்ட மக்கள் குடியிருப்புகளுக்கு அப்பால் உள்ள தனி வீட்டின் வாசல் பகுதியில் கடந்த நான்கு நாள்களாக அநாதரவாக விடப்பட்ட பொதி செய்யப்பட்ட பெட்டி ஒன்று இருந்துள்ளது.

குறித்த பெட்டியை அவதானித்த அயல் வீட்டு சிறுவன், யாரும் அந்தப் பெட்டியை எடுத்து செல்லாத நிலையில் சந்தேகமடைந்து பெட்டியை பரிசோதித்துள்ளான்.

பெட்டியை பிரித்த போது உள்ளே திரவம் நிரப்பப்பட்ட போத்தல்கள், வயர்கள், பட்டாசுகள் இருப்பதை அவதானித்து இது தொடர்பாக அயலவர்களிடம் தெரிவித்ததை அடுத்தே நானு ஓயா பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

# சமுர்த்தி, பொலிஸை அழைத்தது 'கோபா'

கடந்த காலங்களில் இத்திணைக்களம் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை ஆகியவற்றை ஆராயும் நோக்கில் பொலிஸ் திணைக்களம் எதிர்வரும் 26ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்டிருப்பதாக அதன் தலைவர் தெரிவித்தார்.



# தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்க பேசவில்லை

பாராளுமன்றத்தில் தான் கூட்டாக முன்வைக்க உள்ளதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அவர் அனுப்பிய அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

"இது திரித்து கூறப்படும் பொய்யான செய்தி. ஆளுந்தரப்பில் இருந்து எதிரணிக்கு வந்துள்ள முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான இணைய தளத்திலேயே முதலில் இச்செய்தி வந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சியாகவே தற்போது தமிழ் முற்போக்குக் கூட்டணி இருக்கின்றது.

தேசிய அல்லது எந்தவோர் அரசாங்கத்திலும் அங்கம் வகிப்பது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழு கூடிப்பேசவும் இல்லை; எந்தவித முடிவும் எடுக்கவும் இல்லை" என்றார்.

# 7 பக்க ஆட்சேபனையை சமர்ப்பித்தார் தப்புல

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் ஒருவரை சாட்சியாக அழைப்பது சட்டத்தை மீறும் செயலாகும் என்று 12 விடயங்களை மேற்கோள் காட்டி குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டமொன்று காணப்படுவதாக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற விதம், நேரம், தினம் மற்றும் ஏனைய விடயங்கள் அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்தமையின் ஊடாக பாரிய சதித்திட்டமொன்று இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றமை வெளிப்படுவதாக அவர் கூறியிருந்தார்.

இந்தப் பாரிய சதித்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் சாட்சியங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

முன்னாள் சட்டமா அதிபரின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் அவரிடமிருந்து வாக்குமூலம் பெறப்படும் என்று நீதியமைச்சர் விஜயதாஸவும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஈஸ்டர் தாக்குதல் குறித்து வெளியிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடக்குமுறை ஆட்சி, ஊழலுக்கு எதிராக

# ஐந்து இடங்களில் இருந்து கொழும்புக்கு யாத்திரை

## வெள்ளியன்று பொதுக்கூட்டம்

நிதர்ஷன் வினோத், எம் எஸ் எம் நூர்தீன்

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சி மற்றும் ஊழலுக்கு எதிராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'பாசத்துக்கான யாத்திரை' நாட்டின் ஐந்து பகுதிகளில் இருந்து புதன்கிழமை (19) ஆரம்பமானது.

யாழ். நல்லூர், கண்டி ஸ்ரீ தலதா மாளிகை, மட்டக்களப்பு - காத்தான்குடி, மன்னார் - மடு, கதிர்காமம் கிரி விகாரை ஆகிய இடங்களில் இருந்தே இப் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் தலைமையில் நல்லூர் ஆலயத்திலிருந்து பாசத்துக்கான யாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு, காத்தான்குடி மீரா ஜும்மா பள்ளிவாயல் வீதியில் பாதையாத்திரை ஆரம்பமானது. இதில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நீதியை நிலைநாட்டி அநீதியை ஒழித்து ஜனநாயகம், ஊழலற்ற நாடு மீள் இணக்கம் நல்லிணக்கம் என்பவற்றை உருவாக்குவதற்கான சமாதான பாதயாத்திரையாக இந்த யாத்திரை இடம் பெறுவதாக இதன் ஏற்பாட்டாளர் சட்டத்தரணி பத்தரக்க மனமேந்திர தெரிவித்தார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் இருந்து ஆரம்பித்த யாத்திரை, கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்காவுக்கு அருகில் கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது.

கதிர்காமம் கிரி விகாரைக்கு அருகிலிருந்தும் மன்னார் - மடு பிரதேசத்தில் இருந்தும் யாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்யாத்திரை வெள்ளிக்கிழமை (21) கொழும்பை வந்தடையவுள்ளதுடன், மாலை 6 மணிக்கு ஹைட் பார்க் மைதானத்தில் பொதுக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# 2025க்கு முன் 172 அபிவிருத்தி திட்டங்கள் பூர்த்தியாகும்

கடந்த வருடம் மட்டும் 9 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

கந்தளாய், தெஹிவளை-கல்கிஸ்ஸ, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, மஹரகம, ஹோமாகம, கஸ்பேவ, நுவரெலியா, தம்புள்ள, கொழும்பு அபிவிருத்தித் திட்டம் என்பன கடந்த வருடம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களாகும்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நகர அபிவிருத்தி நிர்வாகப் பிரதேசமாக நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசமும் நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக பயன்படுத்தப்படும்.

அதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடுகளை மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளது. 1978/41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட மூலம் அது உரித்தாகிறது.

உண்மையான அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு மிகவும் பயனுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்துமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், இல்லையெனில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்படலாம் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய அரசால் காகிதாதிகள் கையளிப்பு

இந்திய அரசின் உதவியோடு பாடப்புத்தகங்கள் அச்சிடுவதற்கான பெருந்தொகையான காகிதாதிகள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் நேற்றைய தினம் (19) காகிதாதிகளை கைளிக்கும் மற்றும் கையேற்கும் நிகழ்வு, கல்வி அமைச்சின் மஹரகம களஞ்சியசாலையில் இடம்பெற்றது.



இதில் இந்திய அரசின் சார்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே கலந்து கொண்டார். அத்துடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூல வரைவு

# ஜனநாயகத்துக்கு எதிரானதே

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்

தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமூல வரைவு ஜனநாயகத்துக்கு எதிரானதாகவே கொள்ளப்பட வேண்டும் என வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமூல வரைவு தொடர்பான சிவில் சமூகத்தின் அவதானிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு மட்டக்களப்பு தனியார் விடுதியில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்றது. கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் பணிப்பாளர் எம்.எல். எம் புஹாரி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் வளவாளருமான ஷெரீன் சரூர் பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமூல வரைவு தொடர்பாக சிவில் சமூகம் எதிர்கொள்ளப்போகும் பாதிப்புகள் தொடர்பாக தெளிவூட்டினார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வளவாளர் ஷெரீன், யுத்தத்தின் கோரப்பிடியிலிலிருந்து விடுபட்டுள்ள இலங்கை தனது பிரஜைகளை ஓரங்கட்டி, அவர்கள் மீது பரந்தளவில் திணிக்கப்பட்டுள்ள கடுமையான சட்டங்களை அகற்றியிருக்க வேண்டும். இருந்தும், உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு பதிலளிக்கும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தின் ஊடாக, சிவில் சமூகம், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சிறுபான்மை உட்பட ஏனையோரின் சட்டபூர்வமான, அமைதியான செயற்பாடுகளையும் அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக் கருத்துகளையும் ஒடுக்கும் வகையில் நிறைவேற்று அதிகாரம் பாவிக்கப்பட இருப்பதை அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.



வழமையைப்போல இம்முறையும் முன்மொழியப்பட்டுள்ள சட்டமூல வரைவில் இருக்கும் ஏற்பாடுகளுக்கான சூழமைவும் நோக்கமும் குறிப்பிடப்படவில்லை. ATAயின் முன்னுரையின்படி, நாட்டின் பொருளாதாரம் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பதால் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு கட்டுப்படுவதோடு உலகின் ஏனைய இறைமையுள்ள நாடுகளையும் பாதுகாப்பதற்கான உறுதியுரையும் அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் இந்நேரத்தில் அரசாங்கம் கொண்டுவந்துள்ள கொள்கைகள் மக்களின் மீது பலத்த அடியாக உள்ள சந்தர்ப்பத்தில் ATA அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அடித்தட்டு மக்கள் மட்டுமல்லாது மத்தியதர மக்களின் மீதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்த்து மக்கள் வீதிகளில் இறங்கியிருப்பது வாடிக்கையாகியுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் குறி வைத்தே ATA வரையப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியிலும் உயர்தட்டு மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, போராட்டக்காரர்கள் தீவிரவாதிகளாக காட்டப்பட்டுள்ளார்கள். இதன்மூலம் தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூல வரைவு 'ஜனநாயகத்துக்கு எதிரான சட்டமூலமாகவே' கொள்ளப்படவேண்டும்.

இந்நிகழ்வில், திட்ட அலுவலர் ஸ்ரீயானி ஜோசப் உட்பட மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், சமயப் பெரியார்கள், தன்னார்வ அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மாமாங்கேஸ்வரர் தீர்த்தக் கேணியில் அன்னை பூபதிக்கு திதி

■ வா. கிருஸ்ணா

இலங்கையிலிருந்து இந்திய படையை வெளியேறக்கோரியும் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு வலியுறுத்தியும் மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீர்த்த தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு தினம், நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19ஆம் திகதி, மாமாங்கேஸ்வரர் கோவிலில் அன்னை பூபதி உண்ணாநோன்பு இருந்து 30 நாள்களின் பின்னர், சித்திரை மாதம் 19ஆம் திகதி தனது இன்னுயிரை நீத்தார்.

இதை நினைவுகூரும் வகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில்



சிவில் சமூக செயற்பாட்டாளர்களை கொண்ட அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு உருவாக்கப்பட்டு அதன் ஊடாக நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

நேற்று காலை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவிலுக்கு முன்பாகவுள்ள பகுதியில், அடையாள உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா. சிறிநேசன் உட்பட பெருமளவானோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்துடன், அன்னை பூபதி உயிர்நீர்த்து 35 வருடத்திற்கு பின்னர், அவருக்கு திதி வழங்கும் நிகழ்வும் மாமாங்கேஸ்வரர் கோவில் தீர்த்தக்கேணி அருகில் அன்னை பூபதியின் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு உறுப்பினரும் கிழக்கிலங்கை இந்து குருமார் ஒன்றிய உறுப்பினருமான முரசொலிமாறன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

# கதிர்காம பாதயாத்திரிகர்கள் முறைப்படி வரவேற்கப்படுவர்

## கதிர்காம பஸ்நாயக்க நிலமே தெரிவிப்பு

■ வி.ரி சகாதேவராஜா

வடக்கு, கிழக்கில் இருந்து கானகத்தின் ஊடாக பாதயாத்திரையில் முதல் நாள் வரும் முதல் தொகுதி பாதயாத்திரிகர்கள், கதிர்காமம் நுழைவாயிலில் சம்பிரதாய பூர்வமாக வரவேற்கப்படுவார்கள் என்று கதிர்காம கந்தன் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர தெரிவித்தார்.

மேலும், கடந்த வருடம் பாதயாத்திரையாக 30,000 பேரளவில் கதிர்காமத்துக்கு வந்திருந்தனர். இம்முறை அது 60,000ஆக உயரும் என எதிர்பார்க்கின்றேன் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

சித்தர்கள் குரல் அமைப்பினர், கதிர்காம பஸ்நாயக்க நிலமேயின்



கதிர்காம வாசஸ்தலத்தில், ஞாயிற்றுக்கிழமை (16) அவரை சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது, இன மத பேதமின்றி, நல்ல சிந்தனையுடன் சேவையாற்றி வரும் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகரவை, சித்தர்கள் குரல் அமைப்பினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

நிலமே, அங்கு மேலும் தெரிவிக்கையில், இம்முறை சித்திரைப் புத்தாண்டு பிறப்புக்கு, கதிர்காமத்துக்கு சுமார் 5,000 மூவின அடியார்கள் வருகை தந்தனர். இது சமாதான புண்ணிய பூமி. அனைவரும் ஐக்கியமாக வாழ வேண்டும். இந்தக் கதிர்காம தலம் அனைத்து மக்களுக்கும் பொதுவான புண்ணிய பூமி. சித்தர்கள் குரல் அமைப்பு கடந்த வருடம் இங்கு யாகத்தையும் அன்னதானத்தையும் வழங்கி இருந்தமை எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இம்முறையும் அதனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். பாதயாத்திரையில் கலந்து கொள்வோர் வயது கட்டுப்பாட்டுடன் ஆசார பூர்வமாக பங்கேற்பதை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது என்றார்.

முல்லைத்தீவில் மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தின் பலன்

# சட்டவிரோத படகுகள் கைப்பற்றப்பட்டன; எட்டு மீனவர்களும் கைது

■ செ. கீதாஞ்சன்



முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையான கடலில் ஒளிபாச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில், நாயாற்று கடற்பரப்பில் வைத்து நான்கு படகுகளுடன் எட்டு மீனவர்களை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி, திங்கட்கிழமை (17) கடற்படை தளத்துக்கு முன்பாக, மாவட்ட மீனவர்கள் போராட்டம் மேற்கொண்டு கடற்படையினருக்கு மனு ஒன்றையும் கையளித்தனர்.

இந்த நிலையில், கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஆகியன இணைந்து மீனவர்களின் ஒத்துழைப்புடன் நான்கு படகுகள் கைப்பற்றப்பட்டதுடன் எட்டு மீனவர்களும் கைதுசெய்யப்பட்டார்கள்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களில் ஆறு மீனவர்கள் புல்மோட்டை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரும், கறுக்குப்பனை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் படகுகளுடன் கைதுசெய்யப்பட்டு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது, மீனவர்கள் எட்டுப் பேரும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளதுடன் மீனவர்களின் சான்று பொருட்கள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடற்படையினர் மற்றும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு, முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளன தலைவர் எஸ். அருள்நாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கடற்படையினரும் திணைக்களமும் சேர்ந்து நான்கு படகுகளை கைதுசெய்துள்ளார்கள். இந்த நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கும் கடற்படையினருக்கும் 25 படகுகளை வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களாகிய நாங்கள் தயாராக இருக்கின்றோம். கடற்படையினர் தொடர்ந்தும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# வவுனியாவில் அன்னை பூபதிக்கு அஞ்சலி




■ க. அகரன்

இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேறக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு உயிர்நீத்த அன்னை பூபதியின் 35ஆவது நினைவுதினம் வவுனியாவில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியாவில் கடந்த 2,250வது நாளாகச் சுழற்சிமுறை உணவுத்தவிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் குறித்த அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 11.00 மணிக்கு இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில், அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு தீபம் ஏற்றி, மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# மன்னாரில் அன்னை பூபதிக்கு நினைவேந்தல்



■ மன்னார் நிருபர்

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்ணாநோன்பு இருந்து உயிர்த் தியாகம் செய்த 'தியாக தீபம்' அன்னை பூபதியின் 35 ஆவது ஆண்டு நினைவு தினம் மன்னாரில் நேற்று (19) அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசு கட்சி மன்னார் கிளையின் ஏற்பாட்டில், காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட அலுவலகத்தில், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது, 'தியாக தீபம்' அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதேவேளை, அன்னை பூபதி நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில், நினைவேந்தல் நிகழ்வும் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது, மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், மத தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு மலர் தூவி, சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

# 'பாசத்துக்காக யாத்திரை' பேரணி யாழில் ஆரம்பித்தது

■ நிதர்சன் வினோத்

அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக 'பாசத்துக்காக யாத்திரை' எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம், நல்லூரில் இருந்து பேரணி ஆரம்பமாகி உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் தலைமையில் நல்லூர் ஆலயத்தில் நேற்று காலை விசேட வழிபாடுகளின் பின்னர், அங்கிருந்து யாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து, யாழ். பஸ் நிலையம் முன்பாக கையெழுத்துப் பெறும் போராட்டமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிய 'பாசத்துக்கான யாத்திரை' 21ஆம் திகதி கொழும்பை சென்றடையும். அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யும் இந்த யாத்திரையின் நோக்கம், இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இலங்கையர்களாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையை கோருவதேயாகும்.



# யாழ்ப்பாணத்தில் கராஜின் மீது வெடிகுண்டு வீச்சு

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில், யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில் உள்ள வாகன திருத்தகத்தின் மீது இனம் தெரியாத நபர்கள் வெடி குண்டுகளை நேற்று முன்தினம் இரவு (18) வீசியுள்ளனர்.

குறித்த வெடி குண்டுகளில் ஒன்று வாகன திருத்தகத்தில் நின்ற கார் ஒன்றின் மீது விழுந்து வெடித்துள்ளது. இதனால் காரில் சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்த அதேநேரத்தில், வெடிக்காத நிலையிலும் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வெடி குண்டுகள் உள்ளூர் தயாரிப்பாக இருக்கலாம் என்றும், அது பெரியளவிலான சேதங்களை விளைவிக்க கூடியவாறு காணப்படவில்லை எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிய வருகிறது.

# வஞ்சிக்கப்படும் வஞ்சிகள்

எம்.பிரபா

முறைசாரா பெண் தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றதா? என்று கேள்வி எழுப்பப்படுமானால் இல்லை என்ற பதிலே மேலோங்கி காணப்படுவதாக ப்ரொடெக்ட் சங்கத்தின் ஹட்டன் கிளைக்காரியால தலைவி கிரிசாந்தி தமிழ்செல்வம் தெரிவித்தார்.

ஹட்டனில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

ஆடைத்தொழிற்சாலை




மற்றும் விற்பனை நிலையங்களில் அதிகளவான பெண்கள் தொழில் புரிந்து வருகின்றனர். இந்த துறைகளில் தொழில் புரியும் பெண்கள் குறிக்கப்பட்ட நேரத்திற்கு மேலதிகமாக தமது உழைப்பை பெற்றுக் கொடுத்தாலும் அவர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் ஏனைய சமூக நல விடயங்கள் முறையாக கிடைப்பதில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இந்த துறைகளில் தொழில் புரியும் பெண்கள் சுமார் 10 மணித்தியாலயத்திற்கும் மேல் தொழிலில் ஈடுப்படும் நிலையில் அவர்களின் உழைப்பு சுரண்டப்படும் நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் இந்த துறையில் தொழில் புரியும் ஆண்களும் பெண்களின் உழைப்பு தொடர்பில் கண்டுக்கொள்வதில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

உடல், உள, பௌதீக ரீதியான சமவுரிமை கிடைக்கப்பெறும் பட்டசத்திலேயே சமத்துவம் பெண்களுக்கும் கிடைக்கப்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மே மாத பூரணையுடன்

# 22/23 சிவனொளிபாதமலை யாத்திரை நிறைவடைகிறது

செ.தி.பெருமாள்

மே மாத போயாவுடன் 2022/ 2023 வருடத்துக்கான சிவனொளிபாதமலை யாத்திரை நிறைவுக்கு வருகின்றது.

அன்றையதினம், சதாடுக கரடுவ மற்றும் சமன் தேவ சிலை சுமந்த ஊர்வலம் நடைபெறவுள்ளது.

இந்த ஊர்வல ஏற்பாடு தொடர்பிலான விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (18)



இரத்தினபுர மாவட்ட செயலாளர் / துறைசார் அதிகாரி வசந்த குணரத்ன தலைமையில் மாவட்ட செயலாளர் அலுவலக அரங்கில் நடைபெற்றது.

2022/2023 சிவனொளிபாதமலை யாத்திரை டிசெம்பர் பௌர்ணமி போயா தினமான 07ஆம் திகதி ஆரம்பமானது.

ஸ்ரீபாத யாத்திரை காலத்தில் கடும் மழை, அதிக காற்று, பருவத்தில் ஸ்ரீபாதையை செல்வதற்கு மக்களுக்கு மிகவும் உகந்தது என ஸ்ரீபாத தலைவர் தம்மதின்னா கூறினார்.





# மஹா கும்பாபிஷேகம்

கண்டி, பன்விலை கெலாபொக்க ரெலுகஸ் இல. 2 அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா சிறப்பாக திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

41 அடி இராஜகோபுரம் மற்றும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பிகை மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் மஹா பெருஞ்சாந்தி விழா வெகுவிமரிசையாக இடம் பெற்றது.

மெய்யன்

# முகம் சுளிக்கத் செய்யும் நாற்றமெடுக்கும் குப்பைகள்

சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் பிரதான பஸ் நிறுத்துமிடத்தை அண்மித்த பிரதேசங்கள் உரிய முறையில் சுத்தப்படுத்தப்படாமையால், பயணிகளும், மக்களும், சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குப்பைகளை முறையாக அகற்றாமையால், நாளுக்கு நாள் அதிகரிக்கும் நாற்றம் முகம் சுளிக்கச் செய்துள்ளது என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதுமட்டுமன்றி கொசுக்கள் மற்றும் நுளம்புகளின் தொல்லைகளும் அதிகரித்துள்ளன. பெருக்கமும் ஏற்பட்டுள்ளது என்றும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆகையால், ஹட்டன்-டிக்கோயா நகர சபையினர் மேற்படி விவகாரத்துக்கு தீர்வு காணவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இல்லையேல், பஸ்களுக்காக காத்திருக்கும் போது, நுளம்புகளின் கடிக்களுக்கு உள்ளாக நேரிடும் என்றும் பயணிகள் தெரிவித்துள்ளனர்.



# கத்தியைக் காட்டியதால் கத்தியும் இழந்துவிட்டார்

ராமு தனராஜா

கத்தியைக் காண்பித்து அச்சுறுத்திய நபரிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக கத்தி கூச்சலிட்டபோதும், அந்தநபர், சுமார் 2 இலட்சத்துக்கு 10ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று மஹியங்கனையில் இடம்பெற்றுள்ளது.

மஹியங்கனை, மகாவலி ஆற்றங்கரையில் நின்றிருந்த 54 வயதான நபரிடமே கத்தியைக் காண்பித்து இவ்வாறு சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது. இவர், நகரிலுள்ள சாரதி பயிற்சி பாடசாலைக்கு சென்றுவிட்டு சில தேவைகளுக்காக மகாவலி ஆற்றங்கரைக்கு சென்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த நபர் கத்தியைக் காண்பித்து அச்சுறுத்தி, சங்கிலியை



அபகரித்துச் சென்றுவிட்டார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்

பதுளை பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் மஹியங்கனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ரொஹான் விஜேரத்ன உள்ளிட்ட குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சப்ரகமுவ மாகாண இப்தார் நிகழ்வு



சிவாணி ஸ்ரீ

சப்ரகமுவ மாகாண இப்தார் நிகழ்வு இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதயில் திங்கட்கிழமை (17) சிறப்பாக இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக்கமைய சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சினால் முதல் முறையாக மேற்படி இப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ,

இம்மாதம் 7ஆம் திகதி கிறிஸ்தவர்களின் பெரிய வெள்ளி மற்றும் 14ஆம் திகதி தமிழ்- சிங்கள புத்தாண்டும் இடம்பெற்றது. ஏதிர்வரும் 22ஆம் திகதி இஸ்லாமியர்களின் ரமழான் பெருநாளும் இடம்பெற உள்ளது.



சர்வமத நிகழ்வுகள் அனைத்தும் இந்த ஏப்ரல் மாதத்திலேயே வருவது சர்வ மதங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடியதாக அமைகின்றது என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மௌலவிமார்கள் மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னால் உறுப்பினர்களான ஹெய்யா எம்.இப்ளார், நிஹால் பாருக், சப்ரகமுவ மாகாண பிரதான செயலானர் மஹிந்த எஸ்.வீரசூரிய, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குனரத்ன, சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரத்ன, இரத்தினபுரி மாவட்ட முஸ்விம் சம்மேளனத்தின் உறுபினர்களான எம்.எம். இஸ்மத், ஏ.எம்.ஏ.சுல்பிகார் மற்றும் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களை சேர்ந்த இஸ்லாமிய சகோதரர்கள் அரச அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், அதிபர் அசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காதலி துஷ்பிரயோகம்; மற்றுமொருவர் சிக்கினார்

சுமணசிறி குணதிலக்க

15 வயதும் 2 மாதங்களான சிறுமியை, சட்டரீதியான பொறுப்பாளர்களிடம் இருந்து பிரித்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவத்தில், 15 வயதான சிறுமியை தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றே அவ்விளைஞன் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அவ்விளைஞன், அச்சிறுமியுடன் காதல் உறவில் இருந்துள்ளார் என்பது கண்டறியப்பட்டது. அச்சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அயலில் வசிக்கும் ஒருவர் தன்னை 8 வயதில் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் அவருடைய 19 வயதான காதலனும், சிறிய வயதில் துஷ்பிரயோகம் செய்தார் என சந்தேகிக்கப்படும் 28 வயதான நபரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வைத்திய பரிசோதனைக்காக அச்சிறுமி, மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்கேநபர்களை சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# 3,000 மாணவர்களுக்கு கொப்பிகள் வழங்கிவைப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

பெருந்தோட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த அப்பியாசப் கொப்பிகள் இந்தியாவினால் இலவசமாக வழங்கப்பட்டன. ஹட்டன் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளிலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 3,000 மாணவர்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த வைபவம் ஹட்டன், கிருஷ்ணபவான் மண்டபத்தில் புதன்கிழமை (19) நடைபெற்றது.

இந்தியா, சென்னை நகரிலுள்ள விலங்கு வைத்திய பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் கொப்பிகள், பெற்றுக்கொ-ள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஒருங்கிணைப்பை ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் முன்னாள் தவிசாளர் அங்கமுத்து நந்தகுமார் மேற்கொண்டிருந்தார். இதில், பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் பங்கேற்று, அப்பியாசக் கொப்பிகளை வழங்கிவைத்தார்.





# அயல் நண்பரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்

இலங்கை, உலகுக்கு திவாலாகிய நிலையை பிரகடனம் செய்து ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில், சர்வதேச ரீதியில் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்துவது தொடர்பில் தற்போது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெறுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் சர்வதேச கடன்களைப் போன்று, உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்வதிலும் இலங்கை கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, இம்மாத இறுதியில் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்காக எவ்வாறான நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ளவுள்ளது என்பது பற்றி அறிவிப்பதுடன், ஜூன் மாதமளவில் அதற்கான திட்டத்தை அறிவித்து, செப்டெம்பர் மாதமளவில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளின் போது, அந்தத் திட்டத்தின் செயற்படுத்தலை இலங்கை விளக்கமளிக்க வேண்டும்.

இவ்வாறிருக்கையில், எம் அண்டை நாடான இந்தியா, தற்போது பொருளாதார ரீதியில் மிகவும் முன்னேற்றமடைந்த நாடாக காணப்படுகின்ற போதிலும், சுமார் மூன்று தசாப்த காலப்பகுதிக்கு முன்னர், தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ளதைப் போன்று, பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தது.

ஆனாலும், மூன்றாண்டு காலப்பகுதியினுள் இந்தியாவால் தமது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, சுமார் இருபத்தைந்து வருட காலப்பகுதியில் தற்போதைய பொருளாதார நிலைக்கு உயர முடிந்துள்ளது. இதற்கு அந்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட தீர்மானங்கள் முக்கிய பங்களிப்பு வழங்கியிருந்தன.

இலங்கையில் உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் நாட்டில் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் மற்றும் தலைவர்கள் பெருமளவு அக்கறை கொள்ளாவிடினும், நாட்டின் மொத்த கடன் சுமையில் 50 சதவீதமான தொகை உள்நாட்டு கடன் பொறுப்புகளாக அமைந்துள்ளதை மறுத்துவிட முடியாது.

எனவே, அதனை மறுசீரமைப்பு செய்ய வேண்டியதும் கட்டாயமானதாகும். இந்த 50 சதவீதமான உள்நாட்டு கடன் பொறுப்புகளில் சுமார் நான்கில் ஒரு பகுதி திறைசேரி கடன் பத்திரங்களாக அமைந்துள்ளன. அவை முதிர்ச்சியடையும் போது, அவற்றை செலுத்தித் தீர்ப்பதை தவிர்த்து, காலம் தாழ்த்துவதனூடாக மாத்திரம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வை எய்திவிட முடியாது. அவ்வாறு காலம் தாழ்த்துவதனூடாக அவற்றுக்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையும் அதிகரிக்கும். அந்தச் சுமையும் இந்நாட்டு மக்களையே வந்துசேரும்.

எனவே, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, அண்டைய நாடான இந்தியாவின் நிபுணர்களின் உதவி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது சிறந்ததாக அமைந்திருக்கும். குறிப்பாக, மூன்று தசாப்த காலப்பகுதிக்கு முன்னர், தற்போது இலங்கை எதிர்கொண்டுள்ளதைப் போன்ற நெருக்கடிக்கு இந்தியா முகங்கொடுத்திருந்த நிலையில், அதிலிருந்து விடுபடுவதற்கு ஆலோசனை வழங்கியவர்களை அணுக முடிந்தால் பெரிதும் பயனளிப்பதாக அமைந்திருக்கும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தங்களைத் தாங்களே பெரும் புத்திசாலி என எண்ணிக்கொண்டு யாவரையும் கிண்டல், கேலி செய்யும் நபர்கள், தங்கள் உண்மை நிலையைத் தெரிந்துகொள்வதே கிடையாது. இவர்கள் ஆணவத்துடனும் கற்பனையுடனும் வாழ்ந்துவருகின்றனர்.

தன்முனைப்புடன் எவரிடமும் பேசக்கூடாது; இது நாகரிகமற்ற செயல். அறிவாளிகள் கண்டபடி பேசிட நேரம் இருக்காது. பணம் படைத்தவர்களில் சிலர் வசதிகுறைந்தவர்களை ஏளனமாக நோக்குவதுபோல், தங்கள் கண்முன்னே அமைதியாக வாழ்பவர்கள், பணபலம் இல்லாது விட்டாலும் அவர்களின் அறிவுத்திறன் பற்றி யோசிப்பதே இல்லை.

குறுகிய நெஞ்சம் நேர்வழியை நாடாது. நான், எனது எனும் எண்ணங்களுடனேயே தங்கள் முகத்தைக் காட்டி நிற்கின்றார்கள். உலக மாற்றத்தில் உள்ள வடிவங்கள் எதுவெனத் தெரியாது வாழ்வதே ஒருகுறைதான்.

குறைகள் இருந்தால், அதை உணரும் திறனை வளர்க்க முனைய வேண்டும். மாறிடும் உலகத்துக்கு ஏற்ப, வாழ்க்கையை மாற்றினால்தான், இந்த உலகத்துக்கே உங்களை அறிமுகம் செய்யமுடியும்.

மாற்றியமைக்காது விடின், உங்கள் உருவமே மறந்து போய்விடும். எனினும் மாற்றங்கள் நல்லதாக அமைய வேண்டும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சன நடமாட்டமற்ற இடத்தில் எரியூட்டியை அமைக்கவும்

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிவபூமி அறக்கட்டளை நிலையத்துக்குச் சொந்தமான காணியில், யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவுகளை எரிப்பதற்கான எரியூட்டியை அமைக்க வேண்டாம் என நாவற்குழி மேற்கு பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

எரியூட்டியை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள காணி, குடியிருப்புகளை அண்டி இருப்பதுடன், காணியின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வயல்களும் தெற்கில் மீனவர்களின் வாழ்வாதாரமாகத் திகழக்கூடிய கடலும் அமைந்துள்ளது.

குறித்த காணியில் வைத்தியசாலையின் கழிவுகளை எரிக்கும்போது, இப்பகுதியில் காணப்படும் குளங்கள், கிணறுகள் போன்ற நீர்நிலைகள் மாசுபடுவதுடன், நீண்டகாலப் பாதிப்பாக நிலத்தடி நீரும் மாசுபடும். அத்துடன், ஊழியர்களின் அசண்டையீனம் காரணமாக, வைத்தியசாலைக் கழிவுகள் குடிமனைகளுக்குள் பரவக்கூடிய சந்தர்ப்பங்களையும் புறக்கணித்துவிட முடியாது.

எனவே, மக்கள் வாழும் இயற்கைச் சூழலை கவனத்தில் கொண்டு, மக்கள் குடியிருப்புகள் அற்ற பிரதேசத்தில் குறித்த எரியூட்டியை அமைப்பதற்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக் வேண்டும் என்று நாவற்குழி மேற்கு பொது மக்களால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு உள்ளது.

–வசந்தகுமார்

# சாதியவாதிகளால் நிரம்பும் தமிழ்த் தேசிய அரசியல்



புருஜோத்தமன் தங்கமயில்

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி.வி விக்னேஸ்வரன், தன்னுடைய சாதியை அறியும் நோக்கில் தனக்கு மின்னஞ்சல் அனுப்பியதாக வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ. ஐங்கரநேசன் அண்மையில் வெளிப்படுத்தி இருக்கிறார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், விக்னேஸ்வரன் அணியில் ஐங்கரநேசன் முக்கிய பங்கை வகிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட தருணத்திலேயே, ஐங்கரநேசனின் சாதியை விக்னேஸ்வரன் அறிய முயன்றிருக்கிறார். தன்னுடைய அணியில் முக்கிய நபராகச் செயற்பட்ட இன்னொருவரின் சாதியை சுட்டிக்காட்டியே, ஐங்கரநேசனின் சாதியையும் விக்னேஸ்வரன் அறிய விரும்பி இருக்கிறார்.

தமிழ்த் தேசிய அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாறாக, தமிழ்த் தேசிய அரசியல் அரங்கில் சாதியவாதிகளும் மதவாதிகளும் நிரம்பி இருக்கிறார்கள். இன்றும், ஒருவரின் சாதியையும் மதத்தையும் அறிந்து, தேர்தல்களில் போட்டியிட அனுமதிப்பதா இல்லையா என்ற முடிவை எடுக்கும் நிலை இருக்கிறது.

இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தொடங்கி இந்த நிலைக்கு எந்தவொரு கட்சியும் விதிவிலக்கானது அல்ல. ஆனால், வெளிப்படையாக சாதியவாதத்தையோ மதவாதத்தையோ பேசுவதை தவிர்க்கின்றன. அதற்கு, ஆயுதப் போராட்டம் சாதிய, மதவாத சிந்தனைகளுக்கு அப்பால் நின்று எழுந்த ஒன்று என்பதும் காரணம். அதுவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு என்பது, சாதிய அடக்குமுறைகளுக்கு எதிராகவும், மத நல்லிணக்கத்திலும் நிலைத்து நின்றது. அதன் தொடர்ச்சியைப் பேண வேண்டிய கடப்பாடு, இப்போதுள்ள தேர்தல் நோக்கு அரசியல் கட்சிகளின் தலையில் தவிர்க்க முடியாமல் இறக்கி வைக்கப்பட்டு இருக்கின்றது. அதனால்தான், வெளிப்படையாக சாதிய, மதவாத சிந்தனைகளை இந்தக் கட்சிகள் தவிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், சாதிய, மதவாத சிந்தனைகளால் ஆட்கொள்ளப்பட்ட ஒருவர், எவ்வளவுதான் பொதுவெளியில் மறைத்துச் செயற்பட்டாலும், அவரை அறியாமல் எங்காவது வெளிப்பட்டுவிடும். இதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கிளிநொச்சியில் நீண்டகாலமாக வாழ்ந்து வரும் மலைய மக்களை நோக்கி, சாதிய அடையாளங்களைக் குறிக்கும் வார்த்தைகளை சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்படுத்தி இருந்தார்.

பௌத்த சிங்கள அரசாங்கங்களால் காலத்துக்கு காலம் திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட இனக்கலவரங்களை அடுத்து, மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள், கிளிநொச்சியிலும் வன்னிப் பெருநிலப்பரப்பு முழுவதும் மூன்று தலைமுறைகளாக வசிக்கிறார்கள். அந்த மண்ணின் மைந்தர்களாகி விட்டார்கள்.

அவர்கள், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அதியுச்சம் என்று நம்பப்படும் ஆயுதப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கில் மாவீரர்களாகவும் போராளிகளாகவும் இறுதி மோதல் வரையில் பங்களித்து இருக்கிறார்கள். அதனால், அவர்கள் இன்றைக்கும் போராட்ட வடுக்களோடு பின்தங்கிய நிலையில் வாழ வேண்டி இருக்கின்றது.

அவர்களை, மலையக மக்களாக அடையாளப்படுத்தும் வேலைகளை தென் இலங்கை இனவாத சக்திகள் திட்டமிட்டு செய்து வருகின்றன. அதற்கு, சிறிதரன் போன்ற சாதியவாத சிந்தனை கொண்டவர்கள் மறைமுகமாக உதவுகிறார்கள். வாக்குக்காக மட்டுமே அந்த மக்களை சிறிதரன் போன்றவர்கள், மாற்றான்தாய் மனநிலையிலேயே தொடர்ந்தும் அணுகி வருகிறார்கள். அதைத்தான், சிறிதரனின் சாதியவாத உரையாடல் வெளிப்படுத்தியது.

மலையகத்திலிருந்து வடக்கு, கிழக்கில் குடியேறிவிட்ட மக்கள் இன்றைக்கு, தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு பகுதியினர். அவர்களைப் பிரித்து வைத்து, சிறு அரசியல் புரிந்தாலும் அது அநாகரிகத்தின் உச்சம்.

சிறிதரனின் சாதியவாத உரையாடல்கள் ஒலிவடிவில் வெளியாகிய பின்னரும் கூட, தமிழரசுக் கட்சி எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அது குறித்து எந்தவொரு பதிலையும் கூட வெளிப்படுத்தவில்லை. தமிழ்த் தேசிய அரங்கில் இருக்கின்ற கட்சிகளில் பிரதான கட்சியாக தமிழரசுக் கட்சி அப்போது பொறுப்போடு செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால், வாய்மூடி மௌனியாக இருந்ததுதான் வரலாறு.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குள் இருந்த காலத்தில், அதற்குள் சாதிய பாகுபாடுகள் இருந்ததில்லை.

ஆனால், புலிகளின் காலத்துக்குப் பின்னர், கூட்டமைப்பின் சாதியவாத அணுகுமுறை தெளிவாக வெளிப்பட்டது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்குக்கூட, சாதிய அடிப்படைகளுக்காக, கூட்டமைப்புக்குள் சரியாக மதிப்பளிக்கப்படாத சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு அழைத்து வரப்பட்டதும் சாதியவாத, மதவாத, மேட்டுக்குடி அணுகுமுறைகளால்தான் நிகழ்ந்தது. அவர், அரசியலுக்கு வந்தது முதல் தன்னை தமிழ்த் தேசிய அரசியல்வாதியாக முன்னிறுத்துவதைக் காட்டிலும், தன்னுடைய மதத்தையும் மேட்டுக்குடி மனநிலையையும் வெளிப்படுத்துவதிலும் குறியாக இருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய பிரதமர் மோடியிடம், சிறுவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தி சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேமானந்தாவுக்கு பொதுமன்னிப்பு அளிக்க வேண்டும் என்று விக்னேஸ்வரன் வலியுறுத்தி இருந்தார். அது அவரின் மதவாத நோக்கு நிலையால் வந்ததொன்று!

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், விக்னேஸ்வரனை மேட்டுக்குடி என்பதற்காக அரசியலுக்கு அழைத்து வந்தார் என்பது வெளிப்படையானது. ஆயுதப் போராட்டத்தின் மீது சம்பந்தனுக்கு சிறிதும் அபிமானம் இல்லை. அந்தப் பின்னணியில் இருந்து அரசியலுக்கு யார் வந்தாலும், அவர்களை ஒவ்வாமையோடுதான் அணுகி வந்திருக்கிறார். அதனை அவர், பொது வெளியிலேயே வெளிப்படுத்தி இருக்கின்றார். அதனால்தான், விக்னேஸ்வரனை அவர் அரசியலுக்கு அழைத்து வந்தார். சம்பந்தனின் எண்ணத்தை நிறைவேற்றுவதில், அப்போது எம்.ஏ சுமந்திரன் பெரும்பங்காற்றினார். அதில், விக்னேஸ்வரன் மீதான குரு என்கிற விசுவாசம் கூட இருந்திருக்கலாம்.

விக்னேஸ்வரன் எவ்வாறான அணுகுமுறைகளோடு தமிழ்த் தேசிய அரசியலுக்கு அழைத்து வரப்பட்டிருக்கின்றார் என்பது, சிறிய காலத்துக்குள்ளேயே வெளிப்பட்டுவிட்டது. ஆனால், அதையெல்லாம் புறந்தள்ளிக் கொண்டு யாழ். மையவாத புத்திஜீவிகளும், அரசியல் ஆய்வாளர்களும் தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்து, விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியத்தின் புதிய தலைமையாக கட்டமைக்க முயன்ற வரலாறு, தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு பக்க அவலத்தை வெளிப்படுத்துவதற்கு போதுமானதாகும்.

விக்னேஸ்வரன் ஒரு சாதிய மேட்டுக்குடி சிந்தனைகள் நிரம்பிய மதவாதி என்பது வெளிப்படையானது. அவரை, சம்பந்தனுக்கு மாற்றான தலைவராக நிறுத்துவதற்காக அவருக்கு ஜனவசிய பிம்பங்களை நாளும் பொழுதும் வரைந்து கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த நிலையில், விக்னேஸ்வரனை சித்திரிக்கும் வேலைகளை எல்லாம் தமிழ் மக்கள் பேரவை எனும் பெயரில் யாழ். மையவாத குழு பண்ணியது.

அப்போது, விக்னேஸ்வரனை மிகப்பெரிய உன்னத தலைவராக, ஐங்கரநேசன் நம்பியதாக இப்போது கூறுகிறார். விக்னேஸ்வரன், சாதி கேட்டதை மாபெரும் குற்றமாக இப்போது அவர் வெளிப்படுத்துகிறார். ஆனால், இதில் இருக்கும் வியப்பு என்னவென்றால், வடக்கு மாகாண சபையில் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் அளவில் விக்னேஸ்வரனின் அமைச்சரவையில், அவருக்கு அடுத்த நிலையில் ஐங்கரநேசன் இருந்திருக்கிறார். விக்னேஸ்வரனை அனைத்து இடங்களிலும் நியாயப்படுத்துவதிலும் குறியாக நின்று அப்போது இயங்கியிருந்தார்.

அப்படிப்பட்டவருக்கு, விக்னேஸ்வரனின் உண்மையான சாதியவாத, மதவாத முகம் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில்தான் வெளிப்பட்டது என்பதைதான் எப்படிப் புரிந்து கொள்வது என்று தெரியவில்லை.

தமிழ்த் தேசிய அரசியல் சாதிய, மதவாத, வகுப்புவாத, பிரதேசவாத சிந்தனைகளைப் புறந்தள்ளி, மக்களை ஒரே மக்களாக, ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கான அடிப்படை நோக்கங்களைக் கொண்டு முன்னோக்கி செல்ல வேண்டும்.

ஆயுதப் போராட்ட காலத்தில் குறிப்பாக, புலிகளின் காலத்தில் அதனை நோக்கி நகர்வு குறிப்பிட்டளவு இருந்தது. ஆனால், புலிகளின் காலத்துக்குப் பின்னரான தமிழ்த் தேசிய பயணம் என்பது, சமூக விடுதலைக்குப் புறம்பான சிந்தனை கொண்டவர்களால் ஆக்கிரமிக்கப்படும் சூழல் இருக்கின்றது.

விக்னேஸ்வரன், சிறீதரன் போன்றவர்கள் ஒருசில உதாரணங்கள் மட்டுமே! அவர்கள், ஆர்வக்கோளாறு அல்லது தன்னிலை மறந்து நின்று தங்களின் சுயரூபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்; அவ்வளவுதான்! மற்றப்படி, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இருப்பவர்களில் குறிப்பிட்டளவானவர்கள் சாதிய, மதவாத சிந்தனைளோடு இருப்பவர்கள்தான் என்பதுதான் முகத்தில் அறையும் உண்மை.

இது, தமிழ்த் தேசிய இயக்கத்துக்கு மிகவும் அச்சுறுத்தலானது. இந்த யதார்த்தத்தை மறைத்து நின்று, தமிழ் மக்கள் எந்த விடுதலையையும் பெற்றுவிட முடியாது.

புதுடெல்லி

# மீண்டும் தீவிரம் அடையும் கொரோனா

இந்தியாவில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது நாளுக்கு நாள் உச்சம் அடைந்து வருகின்றது.

குறிப்பாக இந்தியாவில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 7,633 பேருக்கு கொரோனா உறுதியான நிலையில் இன்று 10,542 ஆகக் கொரோனாப் பாதிப்பு உயர்ந்துள்ளது.

அதேசமயம் கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் 61,233 லிருந்து 63,562 ஆக அதிகரித்துள்ளது.

அதுமட்டுமல்லாது கடந்த சில நாள்களில் கொரோனாவால் 38 பேர் உயிரிழந்த நிலையில் உயிரிழப்புகளின் எண்ணிக்கை 5,31,152 லிருந்து 5,31,190 ஆக உயர்ந்துள்ளது.




இதனையடுத்து நாடு முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது 4,48,34,859 இல் இருந்து 4,48,45,401 ஆக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை

## காதலன் பார்த்ததால் காதலி மரணம்



சென்னை, ஆவடி பகுதியைச் சேர்ந்தவர் அஜித். 22 வயதான இவர் தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இவர் செல்வி என்ற 21 வயதான யுவதியைக் காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் (18) காதல் ஜோடி இருவரும் செம்பரம்பாக்கத்தில் உள்ள பூங்காவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இந்நிலையில் குன்றத்தூர் அருகே இவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் தலையில் பலத்த காயம் அடைந்த செல்வி, காதலன் கண் எதிரே சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதே சமயம் படுகாயம் அடைந்த அஜித், அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளை வேகமாக ஓட்டிச்சென்ற அஜித், பின்னால் அமர்ந்து கொண்டிருந்த காதலியின் முகத்தை பார்த்தபடி ஓட்டிச்சென்றதே விபத்துக்கு காரணம் என பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

ராஜஸ்தான்

## இளைஞரைத் தற்கொலைக்கு தூண்டிய அமைச்சர்

இளைஞரைத் தற்கொலைக்குத் தூண்டியதாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மகேஷ் ஜோஷி என்ற அமைச்சர் மீது ராஜஸ்தானில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜெய்ப்பூரில் சுபாஷ் சவுக் பகுதியை சேர்ந்தவர் ராம்பிரசாத். 38 வயதான இவர் அங்குள்ள ஒரு களஞ்சிய சாலையொன்றில் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

அவர் இறப்பதற்கு முன்பாக பதிவு செய்த வீடியோவில் அமைச்சர் மகேஷ் ஜோஷி, ஹோட்டல் உரிமையாளர் முஞ்ச் தங்க் உள்ளிட்டோர் தனது குடும்பத்துக்கு ஏராளமான தொல்லை கொடுத்ததால், தாம் இந்த முடிவை எடுத்ததாகக் கூறியிருந்தார்.

இதைத்தொடர்ந்து ராம்பிரசாத்தின் சகோதரர், சுபாஷ் சவுக் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.


அதன்பேரில், ராம்பிரசாத்தை தற்கொலைக்கு தூண்டியதாக அமைச்சர் மகேஷ் ஜோஷி மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



பாகிஸ்தான்

## இளைஞர்களை கடத்தும் பொலிஸார்

### பாகிஸ்தானில் பரபரப்பு



பாகிஸ்தானின் ஜகாரியா கோத் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்களை அண்மையில் மர்ம கும்பலொன்று கடத்திச் சென்றுள்ளதோடு அவர்களை விடுவிக்க வேண்டுமென்றால் 50 இலட்சம் ரூபாய் தரவேண்டுமெனவும் நிர்ப்பந்தித்துள்ளது.

இந்நிலையில் 5 பேர் கொண்ட குறித்த கும்பலில் நால்வரைப் பொலிஸார் அண்மையில் கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்டவர்களில் இருவர் கராச்சி நகர பொலிஸார் என்பதும், அவர்கள் பணியில் இருப்பவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. அத்துடன் தப்பிச் சென்ற நபரும், பொலிஸ் பிரிவை சேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது.

மேலும் இளைஞர்களைக் கடத்திச் சென்ற கும்பல் அவர்களைப் பொலிஸ் நிலையமொன்றிலேயே மறைத்து வைத்திருந்தமையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அமெரிக்கா

## கதவைத் தட்டிய சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு

அமெரிக்காவில் விலாசம் மாறி தவறான கதவினைத் தட்டிய கறுப்பின சிறுவன் மீது, வெள்ளை இன முதியவர் ஒருவர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் வாழும் மக்களிடையே நிற வெறி மற்றும் துப்பாக்கி கலாசாரம் மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது.

குறிப்பாக, அந்நாட்டில் துப்பாக்கிச் சூட்டால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

அந்தவகையில் மற்றொரு அதிர்ச்சிகரமான சம்பவம் கனாஸ் சிட்டி பகுதியில் நிகழ்ந்துள்ளது. அப்பகுதியைச் சேர்ந்த 16 வயதான ரால்ப் யார்ல் என்ற கறுப்பின சிறுவன் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தனது நண்பரைப் பார்க்கச் சென்றுள்ளான்.

அப்போது விலாசம் மாறி வேறு ஒரு வீட்டிற்கு சென்று அழைப்பு மணியை அழுத்தியுள்ளான்.

இந்நிலையில், குறித்த வீட்டில் இருந்த அன்ட்ரூ லெஸ்டர் என்ற 84 வயதான முதியவர் கதவை திறந்த போதே தான் வேறு இடத்திற்கு மாறி வந்துவிட்டோம் என்பது ரால்ப்பிற்கு தெரியவந்துள்ளது.

அதேசமயம் அச்சிறுவனின் வருகையால் ஆத்திரமடைந்த முதியவர், தன் வீட்டில் இருந்த துப்பாக்கியால் சிறுவனை சரமாரியாகச் சுட்டுள்ளார்.

இதில் சிறுவனின் தலை மற்றும் கை பகுதிகளில் குண்டு பாய்ந்துள்ளது. இதனையடுத்து சிறுவன் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றான்.

அதே சமயம் குறித்த முதியவரைக் கைது செய்த பொலிஸார், இது குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலும் கறுப்பின மக்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.






# சம்பியன்ஸ் லீக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட செல்சி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி வெளியேற்றப்பட்டுள்ளது.

நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட்டுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் பின்தங்கியிருந்த செல்சி, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று காலிறுதிப் போட்டியிலும் 0-2 என்ற கோல் கணக்கில் தோற்று, 0-4 என்ற மொத்த கோல் வித்தியாசத்தில் தொடரிலிருந்து வெளியேறியது.

மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் றொட்றிகோ பெற்றிருந்தார்.

இந்நிலையில், சக இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியுடனான முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்ற ஏ.சி மிலன், அவ்வணியின் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியதைத் தொடர்ந்து 2-1 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஒலிவியர் ஜிரூட் பெற்றதோடு, நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை விக்டர் ஒஸிம்ஹென் பெற்றிருந்தார்.

### கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்:

## கரைச்சி பிரதேச செயலர் அணி வசமாகியது

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் விளையாட்டுப் போட்டித் தொடரின் கடந்தாண்டுக்கான வெற்றிக்கிண்ணத்தை கரைச்சி பிரதேச செயலர் அணி கைப்பற்றியது.

அதேவேளை, இரண்டாமிடத்தை பூநகரி பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட முற்றவெளி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தன.



### அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின்

## பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடர்

■ வி. சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிறீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் ஆரம்ப நிகழ்வும் கழக சீருடை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தொடரில் கலந்து கொள்கின்ற ஏழு அணிகளின் பெயர்கள் மற்றும் வீரர், நடுவர்கள், வர்ணனையாளர்கள், புள்ளிகணிப்பீட்டாளர்கள், மேற்பார்வையாளர்கள், அனுசரணையாளர்கள் அறிமுகம்



செய்து வைக்கப்பட்டதுடன் அவர்களுக்கான சீருடைகளும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி

## ஆஷஸுக்கான அவுஸ்திரேலியக் குழாமில் மார்ஷ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி, முதலிரண்டு ஆஷஸ் போட்டிகளுக்கான அவுஸ்திரேலியக் குழாமில் மிற்செல் மார்ஷ், மார்க்கஸ் ஹரிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், கமரொன் பான்குறொஃப்ட், மிஷெல் நேஸர், பீற்றர் ஹன்ட்ஸ்கொம்ப் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: உஸ்மான் கவாஜா, டேவிட் வோர்னர், மார்க்கஸ் ஹரிஸ், மற் றென்ஷோ, மர்னுஷ் லபுஷைன், ஸ்டீவன் ஸ்மித், ட்ரெவிஸ் ஹெட், அலெக்ஸ் காரி, ஜொஷ் இங்லிஸ், மிற்செல் மார்ஷ், கமரொன் கிறீன், பற் கமின்ஸ் (அணித்தலைவர்), மிற்செல் ஸ்டார்க், ஜொஷ் ஹேசில்வூட்,



ஸ்கொட் போலண்ட், நேதன் லையன், டொட் மேர்பி.

## ஐ.பி.எல்: சண்றைசர்ஸை வீழ்த்திய மும்பை

இந்தியன் பிறீமியர் லீக்கில், ஹைதரபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சண்றைசர்ஸ்

மும்பை: 192/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கமரொன் கிறீன் ஆ.இ 64 (40), இஷன் கிஷன் 38 (31), திலக் வர்மா 37 (17), றோஹித் ஷர்மா 28 (18), டிம் டேவிட் 16 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 1/31 [4])



சண்றைசர்ஸ்: 178/10 (19.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: மாயங்க் அகர்வால் 48 (41), ஹென்றிச் கிளாசென் 36 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிலே மெரிடித் 2/33 [4], ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப் 2/37 [4], அர்ஜுன் டெண்டுல்கர் 1/18 [2.5], கமரொன் கிறீன் 1/29 [4])

போட்டியின் நாயகன்: கமரொன் கிறீன்

இந்நிலையில், மொஹாலியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை பஞ்சாப் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், டெல்லியில் இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை கொல்கத்தா நைட் றைடர்ஸ் எதிர்கொள்கிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 20 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.